# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் தேதி காலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்றக் கூட்ட நடவடிக்கை

## முன்னிலை: அ. வீரமுத்துகுமார் B.Tech.,
## தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோவிலை சுற்றி அமைந்துள்ள நான்கு ரத வீதிகளில் மழைக்காலஙகளில் மழைநீர் மேற்காணும் வாறுகாலின் வழியாக கடலுக்கு சென்று கொண்டிருந்தது. தற்பொழுது மேற்காணும் வாறுகால் சேதமடைந்தும் குப்பை கூழஙகள் நிறைந்தும் காணப்படுவதால் மழைக்காலஙகளில் மழைநீர் கடலுக்கு செல்வதற்கு சிரமமாக உள்ளது. மேலும் மேற்காணும் பகுதியில் வாறுகாலுடன் கூடிய நடைபாதை ஒன்று அமைத்தால் மழைக்காலஙகளில் மழைநீர் செல்வதற்கும், ஆடி அம்மாவாசை, தை அம்மாவாசை, மற்றும் கூட்டம் அதிகமான நேரஙகளில் மேற்காணும் நடைபாதையின் வழியாக மக்கள் செல்வதற்கு இலகுவாக இருக்கும். இதனால் கூட்டம் அதிகமான நேரஙகளில் போக்குவரத்து நெரிசலை குறைத்திட வாய்ப்புகள் இருக்கும். எனவே மேற்காணும் பகுதியில் வாறுகாலுடன் கூடிய நடைபாதை அமைத்திட ரூ.8.20 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம். | தீர்மானம் எண். 192 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு:</u>** மேற்காணும் பணியானது இராமேஸ்வரம் நகருக்கு வருகை தரும் யாத்ரீகர்கள், சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | |
| **2** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN65 Q8201 வானத்தில் பழுது நீக்க பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 193 அனுமதிக்கப்பட்டது.** |
| **3** | இராமேஸ்வரம் நகராட்சியில் நம்புநாயகி அம்மன் தலைமை நீரேற்று நிலையம், மெய்யம்புளி நீரேற்று நிலையம், செம்மமடம் நீரேற்று நிலையம், ஆகிய உள்ளூர் நீராதாரஙகளைக் கொண்டு நகராட்சியில் உள்ள 22 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டில்கள் மூலம் குடிநீர் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம், செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீரின் கடினத்தன்மை, உப்புத் தன்மை, மற்றும் பாக்டீரியாக்கள், அளவினை ஆய்வகத்தின் மூலம் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வாரியம், சிவகஙகை ஆய்வகத்தை தொடர்பு கொண்டு கேட்ட போது ஒரு ரூ.1800/— என நிர்ணயம் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. நமது நகராட்சியில் மூன்று நீரேற்று நிலையத்தில் உள்ள குடிநீரினை பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளதால் ஒரு மாதத்திற்கு 3x1800=5400 ஆகும் ஒரு வருடத்திற்கு | **தீர்மானம் எண். 194 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | 12x5400=ரூ.64800/— ஆகும் மேற்கண்ட செலவினத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| **4** | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திடும் பொருட்டு சுமார் 52.00கி.மீ நீளத்திற்கு குடிநீர் பகிர்மாக்குழாய்கள் மற்றும் குடிநீர் நீரேற்றக்குழாய்கள் அமைக்கப்பட்டு நகராட்சி நிர்வாகத்தினால் பராமரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இந்நிலையில் நகராட்சி நிர்வாகம், மாநில நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலை ஆகிய துறைகளின் சாலை விரிவாக்கம், தொலை தொடர்பு நிறுவனங்களின் கேபிள் பதிக்கும் பணி, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கம்பங்கள் ஊண்டும் பணி சாலையோரம் உள்ள மரங்களின் வேர்களினால் குடிநீர் குழாய்கள் உடைப்பு ஏற்படுகின்றது. மேலும் தற்பொழுது இராமேஸ்வரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் தற்பொழுது நடைபெறுவதாலும் குடிநீர் குழாய்கள் உடைப்பு ஏற்படுகின்றது. பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் சரிவர குடிநீர் விநியோகம் செய்திட இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே பொதுமக்களின் சீரான குடிநீர் விநியோகத்தினை கருத்தில் கொண்டு குடிநீர் விநியோக உதிரி பொருட்கள் வாங்கிடவும் வெளிநபர்களை கொண்டு மண்வெட்டு செய்து பணிசெய்திடவும் ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம். | **தீர்மானம் எண். 195 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>பொதுமக்களுக்கு சீரான குடிநீர்விநியோகம் செய்திடும் பொருட்டு மேற்காணும் பணியினை அனுமதிக்கலாம். | |
| **5** | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் ஏற்படும் குடிநீர் குழாய் உடைப்பினை சரிசெய்திடும் பொருட்டு குடிநீர் உதிரி பாகஙகள் வாஙகிடவும் மற்றும் வெளிநபர்களை கொண்டு மண்வெட்டு செய்திடும் பணிக்கு ஆம் தேதிய தீர்மானம் எண்: கீழ் நிர்வாக அனுமதி வழஙகியுள்ளதைத் தொடர்ந்து மேற்காணும் பணிக்கு ஆம் தேதியில் முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படியாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>1. திரு. M.K. திருமுருகன் ஒப்பந்ததாரர் இராமநாதபுரம் — மதிப்பீட்டைக் காட்டிலும் 0.17% குறைவு<br>2. திரு. P.N. சுந்தரம் ஒப்பந்ததாரர் இராமேஸ்வரம் — மதிப்பீட்டைக்காட்டிலும் 0.53%கூடுதல்<br><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.17% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. M.K. திருமுருகன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர்/ஆணையாளர் இராமேஸ்வரம் நகராட்சி அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மற்றும் பணி உத்திரவு வழஙகியதையும் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 196 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| **6** | இராமேஸ்வரம் நகராட்சி 1 முதல் 21 வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள தெருமின் விளக்குகளை பராமரித்திட தேவையான தெருமின் உதிரி பாகங்கள் வாஙகிட ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 27.01.19 ஆம் தேதியில் முதன் முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கலாம். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு<br><br>1. M/s. NEW ABBAS HARDWARES No.148/4, Valampuri Mahal, Railway Feeder Road, Rameswaram 623 526. — மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06%குறைவு<br>2. M/s.Mahaveer Electro Controls Madurai. — மதிப்பீட்டைக் காட்டிலும் 0.84% அதிகம்.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06ரூ குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் நிறுவனம் M/s. PKNEW ABBAS HARDWARES No.148/4, Valampuri mahal,Railway Feeder Road,Rameswaram நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். | **தீர்மானம் எண். 197 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| **7** | இராமேஸ்வரம் நகராட்சி தொடர்பான பசுமை தீர்ப்பாயம் வழக்குகளுக்கு வழக்கு கட்டணம் ரூ.42000/– வழக்கறிஞர் திரு. M.கண்ணன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 198 அனுமதிக்கப்பட்டது.** |
| **8** | திட்டப்பணிகள் குறித்த விளம்பரத்தினை தினகரன் நாளிதழ் வாயிலாக பிரசுரம் செய்ததற்கு விளம்பர கட்டணம் ரூ.13650/– செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>அனுமதிக்கலாம் | **தீர்மானம் எண். 199 அனுமதிக்கப்பட்டது.** |
| **9** | திட்டப்பணிகள் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கைகளை 'Award Advertising Agencies' நிறுவனத்தின் மூலம் மாநில அளவில் பிரசுரம் செய்ததற்கு விளம்பர கட்டணம் ரூ.446985/– செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>அனுமதிக்கலாம் | **தீர்மானம் எண். 200 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| **10** | பிளாஸ்டிக் விழிப்புணர்வு தொடர்பான விளம்பரத்தினை தினமணி நாளிதழ் வாயிலாக பிரசுரம் செய்ததற்கு விளம்பர கட்டணம் ரூ.25200/— செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>அனுமதிக்கலாம் | **தீர்மானம் எண். 201 அனுமதிக்கப்பட்டது.** |
| **11** | இராமேஸ்வரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு லெமன் கிராஸ் ஆயில் வாங்கியதற்கு செலவினம் ரூ.970255/— செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>அனுமதிக்கலாம் | **தீர்மானம் எண். 202 அனுமதிக்கப்பட்டது.** |
| **12** | இராமேஸ்வரம் நகராட்சி பகுதியில் 10 எண்ணம் உயர்மட்ட நீர்த்தேக்கத்தொட்டிகள் மராமத்து செய்யும் பணிக்கு 24—09—2018ம் தேதிய நகர்மன்ற தீர்மான எண் 201ன் படி நிர்வாக அனுமதி உத்தரவு வழங்கியதை தொடர்ந்து 04—01—2019ஆம் அன்று முதன் முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண். 203 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 1 | திரு.M.முனியசாமி பாண்டியன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமேஸ்வரம் | மதிப்பீட்டைக்காட்டிலும்<br>0.26% குறைவு |
| 2 | திரு.P.N.சுந்தரம்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமேஸ்வரம் | மதிப்பீட்டைக்காட்டிலும்<br>3.57 % அதிகம் |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>• வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை காட்டிலும் 0.26 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.M.முனியசாமி பாண்டியன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>• பணியின் அவசர அவசியம் கருதி காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம். | |
| 13 | இராமேஸ்வரம் நகராட்சியில் சுவதேஷ் தர்ஷன் 2019–ன் கீழ் ரூ151.00 இலட்சம் மதிப்பீட்டில் ஈஸ்வரியம்மன் கோயில் தெரு கடைசியில் (J.Jநகர்) சுற்றுலா வாகனங்களுக்கான வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படவுள்ள இடமானது மிகவும் தாழ்வாக இருப்பதால், மேற்படி பகுதியில் உள்ளூர் மணல் கொண்டு நிரப்ப ஆகும் செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம் | **தீர்மானம் எண். 203 அனுமதிக்கப்பட்டது.** |

**ஆணையாளர்/தனி.அலுவலர்,**
இராமேஸ்வரம் நகராட்சி.